Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம் (1889) ஆவணி மாதம் 28 ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரவருஷ புரட்டாதிமீ ௯ உ செவ்வாய்க்கிழமை (25 செப்டெம்பர் 1951) [இல. ௭௭]

திருக்கோணேசராலயத்

## திருவுருவங்கள்

### யாழ்ப்பாணத்தின் பல பாகங்களுக்கும் எழுந்தருளச் செய்யும் கிரமமுறை

**25—9—51 செவ்வாய்**

பிற்பகல் 4 மணிக்கு நாவலர் மண்டபத்திலிருந்து புறப்படுதல்; கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, வில்லூன்றிவீதி வழியாக வில்லூன்றிப் பிள்ளையார்கோவிலை அடைதல். அங்கிருந்து புறப்பட்டுப் புதுத்தெரு, பண்ணைத்தெரு, வேளாந்தெருச்சந்தி, யாழ்ப்பாணம்-மானிப்பாய் வீதிவழியே ஓட்டுமடம் சமூகசேவா நிலயத்தை அடைதல். பின்பு சிவலிங்கப்புளியடிவீதி, காங்கேயன்துறைவீதி, கல்லூரிவீதி வழியே சென்று இரவு 10 மணிக்கு நாவலர்மண்டபத்தை அடைதல்.

**26—9—51 புதன்**

காலை 8 மணிக்கு நாவலர் மண்டபத்திலிருந்து புறப்பட்டு $8\frac{1}{2}$ மணிவரையில் நந்தாவில்முனியப்பர்கோவிலை அடைதல். அங்கிருந்து 11 மணிக்குப் புறப்பட்டு இராமநாதன் கல்லூரியைப் 12 மணிவரை அடைதல். பின் 4 மணிக்குப் புறப்பட்டு மல்லாகம் சந்திவழியாக சங்கானை வீதியை அடைந்து அளவெட்டிக்குச் செல்லுதல். அங்குப் புது "ரோட்டு" வழியே அளகொல்லைப் பிள்ளையார்கோவிலை இரவு 7 மணிக்கு அடைதல். பின் 8 மணிக்குப் புறப்பட்டுப் பன்னாலைவீதி, தெல்லிப்பளைச் சந்தி, காங்கேயன் துறைவீதி வழியே மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவிலை இரவு 10 மணிக்கு அடைதல்.

**27—9—51 வியாழன்**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்டுக் காங்கேயன்துறை கயரோக ஆஸ்பத்திரியை $8\frac{1}{2}$ மணிக்கு அடைந்து, 9 மணிக்குப் புறப்பட்டு தொண்டைமானாற்றுக் கோணேசர்கோவிலை அடைதல். அங்கிருந்து பகல் 2 மணிவரை புறப்பட்டுவல்வெட்டித்துறைச்சிவன்கோவிலை $3\frac{1}{2}$ மணிவரை அடைந்து, அங்கிருந்து $4\frac{1}{2}$ மணிவரை புறப்பட்டு $5\frac{1}{2}$ மணிக்குப் பருத்தித்துறையை அடைதல். அங்கே திருவுருவங்கள் நகரசபையாலும் சமூகசேவா சங்கத்தாலும் வரவேற்கப்படும். இரவு 10 மணிக்குப் பருத்தித்துறைச் சிவன் கோவிலை அடைதல்.

**28—9—51 வெள்ளி**

பருத்தித்துறையிலிருந்து மீண்டு பகல் 3 மணிவரை புறப்பட்டு நீர்வேலி அத்தியார் இந்துகல்லூரியை 4 மணிவரை அடையும். பின் 5 மணிக்குப் புறப்பட்டுக் கோப்பாய்ச் சந்தியை அடையும். பின்பு கல்வியங்காட்டுச் சந்தைமார்க்கம் செம்மணி வீதியையடைந்து நாவலியடி வீதி, கல்லூரிவீதிவழியே, நாவலர்மண்டபத்தை இரவு 10 மணிக்கு அடைதல்.

**29—9—51 சனி**

காலை 8 மணிவரை நாவலர் மண்டபத்திலிருந்து புறப்பட்டு, $8\frac{1}{2}$ மணிவரை பண்ணைத் துறையை அடைந்து பின் அல்லைப்பிட்டி வேலாயுதசுவாமி கோவிலைப் பகல் 9 மணிக்கு அடையும். காலை 10 மணிக்கு மண்கும்பான் பிள்ளையார் கோவிலை அடைந்து பின்வேலணை கிராமச்சங்கம், வேலணை அரசினர் மத்திய பாடசாலை, பின் சரவணைநாற்சந்திமார்க்கமாக பகல் 1 மணிவரை புளியங்கூடல் மாரியம்மன் கோவிலை அடையும். பின்பு 4 மணிவரைபுறப்பட்டுச் சுருவில் வாசிகசாலையை 5 மணிவரை அடையும். அங்கிருந்து புறப்பட்டு ஊர்காவற்றுறைச் சிவன்கோவிலை இரவு 10 மணிவரை சேரும்.

**30—9—51 ஞாயிறு**

காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறையிலிருந்து புறப்பட்டு காரைநகர்த் துறைமுகத்தை அடைந்து பின் $9\frac{1}{2}$ மணிக்கு வியாவில் சைவப்பிரகாச வித்தியாசாலையை அடைந்து பிறகு யாழ்டன் கல்லூரி, காரைநகர்ச் சைவ மகாசபை மண்டபம் வழியாகப் பகல் 11 மணிவரையில் காரைநகர் இந்துக்கல்லூரியை அடைதல். பிற பகல் 3 மணிக்குப் புறப்பட்டு மூளாய் ஆஸ்பத்திரி வழியாகப் பகல் 4 மணிவரை மூளாய்ப் பிள்ளையார் கோவிலை அடைந்து பின் 'விக்ரோறியா'க் கல்லூரி வழியாகப் பண்ணாகம் அம்மன் கோவிலை அடைந்து அதன் பிறகு சித்தங்கேணிச் சந்தியை அடைந்து அராலிவீதி வழியாக இரவு 7 மணிக்கு அங்குள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலை அடையும். அங்கிருந்து இரவு 8 மணிக்குப் புறப்பட்டு அராலி தெற்குச் சிவன் கோவிலை $8\frac{1}{2}$ மணிக்கு அடையும். அங்கிருந்து $9\frac{1}{2}$ மணிவரை துணவி வழியாக இரவு 10 மணி வரை வட்டுக்கோட்டையை அடையும்.

**1—10—51 திங்கள்**

காலை 8 மணிக்குப் புறப்பட்டுச் சங்கானை வழியாக சுளிபுரத்தை அடைந்து, அங்கிருந்து மானிப்பாய்க் கிராமச்சங்கத்தைக் 10 மணிக்குச் சேர்ந்து, பின்னர் அவ்விடங்களுக்கு எழுந்தருளிய பின் ஆனைக்கோட்டை வீதி, உயரப்புலம்வீதி, குளப்பிட்டிச் சந்தி காங்கேயன் துறைவீதி, கல்லூரி வீதிமூலம் நாவலர் மண்டபத்தை மாலை 5 மணி வரை சேரும்.

**2—10—51 செவ்வாய்**

நாவலர் மண்டபத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டு 3 மணிவரை கோண்டாவிற் சந்தி வழியே 5 மணிவரை உரும்பராய் ஞான வைரவர் கோவிலை அடைந்து, பின்பு இரவு $6\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டு ஊரெழுப்பிள்ளையார் கோவிலை அடைந்து இரவு 9 மணிக்குப் பலாலிப்பிள்ளையார் கோவிலைச் சேர்தல்.

## தோத்திரம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருவற் றிருந்துன் கழலே நினைந்தேன் கருப்புவியில்
தெருவிற் புகுந்தேன் திகைத்தடி யேனைத் திகைப்பொழிவி
உருவிற் றிகழும் உமையாள் கணவா விடிற்கெடுவேன்
திருவிற் பொலிசத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள்.

[பேரழகுடன் விளங்கும் பெரிய நாயகியாருக்குத் தலைவரே, திருவருள் விலாசத்தோடுகூடிய திருச்சத்திமுற்றமென்னுந் தலத்திற் கோயில்கொண்டருளிய சிவக்கொழுந்தீசுவரரே, கருப்பத்திற் புகுந்து கிடந்தபோது தேவரீருடைய திருவடிகளையே சிந்தித்தேன், பெரிய இந்தப் பூமியிலே (பிறந்து) தடுமாற்றங்கொண்டு தெருவில் அலைகின்றேன், ஆதலின் தமியேனிடத்துள்ள தடுமாற்றத்தைத் தவிர்த்தருள்க, (அங்ஙனமின்றித் தேவரீர்) கைவிட்டால் மாண்டொழிவேன் என்பது சொற்பொருள். கரு - கருப்பம்; கருப்புவியில் - பெருமையுள்ள பூமியிலே] (5)

### யப்பானியப் புடைவை

இலங்கையின் புடைவை வியாபாரத்தில் இந்தியா இதுவரையும் வகித்திருந்த முதலிடத்தை இனிமேல் யப்பான் பிடித்துக்கொள்ளுமெனப் புடைவை வியாபாரிகள் எண்ணுகின்றனர். பெருந் தொகையான யப்பானிய பருத்திப் புடைவை வகைகளும் பட்டுப் புடைவைகளும் வந்து கொழும்பில் இறக்குமதியாகின்றன.

### உருளைக்கிழங்கு முதலியன அதிகமாக இறக்குமதி

சிலகாலங்களாகப் பஞ்சப்பட்டிருந்த கறிக்குரிய வெஞ்சனங்கள் சில விரைவில் இங்கு இறக்குமதியாகுமாம். உருளைக்கிழங்கு, வெங்காயம், மல்லி, கடலை, பருப்புவகைகள் என்பன பெருந்தொகையாகக் கொழும்பில் இறக்குமதி செய்யப்படலாயின. இம்மாதம் முடியுமுன் இவை இன்னும் வந்து சேருமாம். ஐரோப்பிய துறைமுகங்களிலிருந்து 1000 தொன் உருளைக்கிழங்கு வந்து இறக்குமதியாகின்றது. யப்பானிலிருந்து வந்த 350 தொன் கிழங்கு துறைமுகத்தில் இறக்குமதியாகவேண்டி இருக்கிறது. மேலும் ஐரோப்பாவிலிருந்து 3000 தொன்கிழங்கு 3 கப்பல்களில் இம்மாதம் முடியுமுன் வந்து சேருமாம். சில நாட்களுக்கு முன் இருந்தல் 35 சதமாயிருந்த கிழங்குவிலை இப்போது 25சதமாய்விட்டது. மத்தியகிழக்குநாடுகளிலிருந்து 1000 தொன்வெங்காயம்ஏற்றிவரும் 2 கப்பல்கள்சமீபகாலத்தில் வந்து சேருமாம். றங்கூனிலிருந்து பெருந்தொகையானகடலை, துவரம்பருப்பு, ஏனைய பருப்பு வகைகள் வந்து கொழும்புத்துறைமுகத்தில் பறிக்கப்படுகின்றன "மார்செயில்ஸ்" துறைமுகத்திலிருந்து பெருந் தொகையான கொத்தமல்லி விரைவில் இறக்குமதியாகுமாம்.

## காட்டு மிருகங்களைப் படம்பிடிக்கச் சென்ற "சுவான்" என்பவரின் கதி

"சுவான்" என்பவரும் அவருடைய கூட்டாளிமார் சிலரும் காட்டு மிருகங்களைப் படம் பிடிப்பதற்கென மிருகசஞ்சாரம் அதிகமுள்ள மீன்வில்லு என்னும் வனத்திற்குச் சென்றனர். முதனுன் ஓர் குன்றில் நின்று பார்த்தபோது அவ்விடத்தில் 48 யானைகள் ஒரு கூட்டமாய் வந்ததைக் கண்டனர். இக்காட்சியினால் தூண்டப்பட்டு அடுத்தநாளும் தங்கள் படம்பிடிக்கும் கருவிகள், துப்பாக்கிகள் என்பனவுடன் அவ்விடத்துக்குச் சென்றனர். அரைமணி நேரத்தில் அவர்கள் நின்ற மறைவிடத்திலிருந்து காலமைல் தூரத்தில் ஓர் தனியானை நிற்பதைக் கண்டனர்.

சுவானும், பிளேக்கும் இன்னும் ஒருவரும் யானைக்குப் பின்புறமாகப் பதுங்கிச் சென்று யானையைச் சமீபித்து 25 யார் தூரத்துக்குள் போய்விட்டனர். அவர்களுள் ஒருவர் காவலாய் நிற்க, மற்றை இருவரும் அந்த யானையைப் படம்பிடிக்க ஆரம்பித்தனர். அப்போது ஏதோ அரவம் கேட்டு யானை சடேலெனத் திரும்பியது. அங்கு நின்றவர்களைத் தாக்க விரைந்தோடிச் சென்றது. திரு.சுவான் யானைக்கு மிகச் சமீபித்துச் சென்றுவிட்டமையால் அவருடைய துப்பாக்கி கையிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. அவருடைய கூட்டாளியொருவர் யானைக்கு வெடிவைத்தபோதும் அது அதைப் பொருட்படுத்தாது சீறிக்கொண்டு திரு. சுவானை மோதிவிழுத்தி முன்னங்கால்களால் உழக்கித் துவைத்துவிட்டது. மற்ற இருவரும் ஓடி ஒழித்துவிட்டனர். யானை அவர்களைத் தேடிப்பார்த்து விட்டுப் பயங்கரமான பிளிற்றொலியுடன் காட்டுக்குள் ஓடிமறைந்ததாம்.

## யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிர்த்திச் சங்கப் பரீக்ஷகள்—1951

இவ்வாண்டுப் பரீக்ஷைகள் இந்தச் செப்டெம்பர்மீ 27 ந் திகதி வியாழக்கிழமை தொடங்கி மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம் அரசினர் சிக்ஷைப் பாடசாலையிலும், மட்டக்களப்பு அரசினர் ஆங்கிலக் கல்லூரியிலும் நடைபெறுமெனவும் பண்டித பரீக்ஷைக்கு 28 பேரும், பாலபண்டித பரீக்ஷைக்கு 24 பேரும், பிரவேச பரீக்ஷைக்கு 44 பேரும் தோற்றுகின்றார்களெனவும் பழைய பாடவிதானத்தின்படி இது கடைசிப்பரீக்ஷையாகுமெனவும் 1952ம் ஆண்டு தொடங்கிப் புதிய முறைகளின்படி பரீக்ஷைகள் நடைபெறுமெனவும், மேற்படி சங்கக் காரியதரிசி திரு. அ. சரவணமுத்து தெரிவிக்கின்றார்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கரஞூ புரட்டாதி மீ கூ உ செவ்வாய்க்கிழமை


## திருக்கோணசலத் திருவுருவங்கள்

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

—சம்பந்தசுவாமிகள்.

பல நாட்களாக யாழ்ப்பாணத்துள்ள சைவமக்கள் பல்லாயிரக் கணக்கானோர் ஆவலுடன் எதிர்பார்த்தவண்ண மிருந்த திருக்கோணசலப் புராதன திருவுருவங்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை (23-9-51) மாலைப் போதில் அரியாலைச் சந்தியை வந்தடைய, யாழ்ப்பாண நகரத்தும் அயலூர்களிலுமுள்ள ஆயிரமாயிரம் மக்கள் பேரபிமானத்தோடும் பயபக்தியோடுஞ் சென்று வாத்திய கோஷத்துடன் எதிர்கொண்டழைத்து, இத் திருவிழாவிற்கென முந்தியே அலங்காரஞ் செய்யப்பெற்றுள்ள தெருவீதிகள் வழியே எழுந்தருளச் செய்து, அன்றிரவு ஒரு மணிவரையில் யாழ்ப்பாண நகர மண்டபத்திற் கொண்டுசென்று எழுந்தருள வைத்தனர்; அடுத்த நாளாகிய நேற்றைத் தினத்து, யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பல நூற்றுக் கணக்கான சைவமக்கள் வந்து வந்து நகர மண்டபத்தில் எழுந்தருளிய மூர்த்திகளைத் தரிசித்து இயன்ற "காணிக்கை" இட்டு ஆநந்தத்துடன் மீண்டனர். நகரசங்க உத்தியோகத்தர்களுக்கு நேற்று இதன் பொருட்டு விடுமுறைநாள் உதவப்படலாயிற்று; நகர சங்கத்தில் மேற்படி சங்க அதிகாரிகள் முதலானோர் உபயமாகப் பெரும் அன்னதானம் நடைபெற்றது. நேற்றுப் பிற்பகல் 5 மணிக்குமேல், யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன சபையார் பொறுப்பில் மேற்படி மூர்த்திகள் சகல அலங்காரங்களோடும் வரிசைகளோடும், இரு புறத்து முளவகடைகள் ஏனையவியாபார தாபனங்கள் வீட்டு முன்றில்களென்னு மிவற்றின் முகப்பில் மகரதோரணம் பூமாலை வாழை மேற்கட்டி தீபம் பூரணகும்பம் நிரைக்கப்பெற்ற வீதிகளாகிய மணிக்கூட்டு வீதி, "ஆஸ்பத்திரி"வீதி, பெரியகடை வீதி, யாழ் - காங்கேசன்றுறை வீதிவழியே எழுந்தருளச்செய்து இரவு பத்து மணிக்கு மேற் சைவபரிபாலன சபை ஆசிரம காவலர் மண்டபத்தில் கொடுவந்து எழுந்தருள வைக்கப்பெற்றுள்ளன. நேற்றுத்தொடக்கம் அக்டோபர் 2-ந் தேதி முடிய இம் மூர்த்திகளை ஆங்காங்கு எழுந்தருளச் செய்வதற்கு வகுத்த நாட்கிரமம் இற்றைப் பிரசுரத்தின் முற்பக்கத்தில் வெளியிடப்பெற்றிருக்கிறது.

ஆராயுமிடத்து இந்தப் புண்ணிய புராதன மூர்த்திகளை ஒருமுறையேனுங் கண்ணாரத் தரிசிக்கவேண்டு மெனவும், இயன்ற பொருளுதவி செய்து இவற்றிற்கென நவமாகத் திருக்கோயிலை அந்தப் பழைய தானத்திலே யமைத்து, இவற்றின் நித்திய நைமித்திகங்கள் கிரமமாக நடைபெறச் செய்ய வேண்டுமெனவுங் கொண்ட வேணவா இந்த யாழ்ப்பாணத்துச் சைவ மக்களிடத்து வெகுவாகக் காணப்படுகின்றது. தங்கள் தங்கள் பட்டினங்களுக்கும் கிராமங்களுக்கும் இம் மூர்த்திகளை எழுந்தருளச் செய்யவேண்டு மென்ற நோக்கத்துடன் ஆகவேண்டிய முயற்சிகளை இந்நாட்டுச் சைவத் தமிழ் மக்கள் செய்து வருகின்றார்கள்; இம் மூர்த்திகளுடன் கொழும்பிலிருந்து இங்கு வந்துள்ள நண்பர் சிலர், நேற்று இம்மூர்த்திகட்கு நடந்த வரவேற்பையும் பாராட்டிய பத்தித் திறனையும் பார்த்து, இப்படியான உபசாரம் இம்மூர்த்திகள் இதற்குமுன் எழுந்தருளிச் சென்ற எவ்விடத்திலும் செய்யப்படவில்லை யென்னுங் கருத்தப்படச் சொன்னார்கள். இலங்கையின் எப் பாகங்களிலும் சைவமுந் தமிழும் ஆதிகாலந் தொட்டு விளங்குகின்றன வெனினும், இவையிரண்டற்கும் மூலஸ்தானமாக வுள்ளதும் இவற்றை இனிது வளர்த்து விருத்திசெய்த நாவலன் பிறந்ததும் யாழ்ப்பாண நாடென்பதை இங்குள்ள மக்கள் மறந்துவிடவொண்ணாது. இம் மூர்த்திகளை ஸ்தாபித்தற்காகிய திருக்கோயிலை அக் கோணசலத்தில் அமைப்பதற்காகிய பெரும் பொருளில் ஒருபெரும்பாகத்தை இங்குள்ள மக்கள் சேர்த்து உதவவேண்டும்; இந்த ஈழ நாட்டு மக்களுக்குத் தேவாரம் பெற்ற புராதன தலங்கள் இரண்டனுள் இத் திருக்கோணசலமுமொன்றலவா! கால வித்தியாசத்தினாற் பன்னூற் றாண்டு கழிந்தும் பூமியுள் மூடுண்டு மறைந்து கிடந்த மூர்த்திகள் வெளிப்பட்டுப் பழையபடி திருக்கோயில்களில் எழுந்தருளி அடியார்க்கு அருள் புரியும் புண்ணியகாலம் பிறந்துவிட்டது!

## உள் நாட்டு விமானப் பிரயாணச் சேவை

திங்கள், புதன், வியாழன், வெள்ளி, என்னும் நாட்களில் விமான "அக்கடெமி" (Air Academy) யால் நடத்தப்படும் ஆகாயப் பிரயாணங்கள் ஓர் குறித்த நேர அட்டவணைப்படி கொழும்பு, மின்னேரியா, அம்பாரை (கல்ஓயாவைச் சேர்ந்த) திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் செல்லும்.

திங்கள் புதன் கிழமைகளில் ஒரு விமானம் கொழும்பிலிருந்து திருக்கோணமலை வழியாகக் காங்கேசன்துறைக்குச் செல்லும். திரும்பும் மார்க்கத்தில் மின்னேரியாவில் தங்கிச்செல்லும். குறித்த நாட்களில் மற்றொரு விமானம் றட்மாலானவி லிருந்து மின்னேரியா வழியாக அம்பாரைக்குப் பிரயாணமாகும்.

வியாழன் தோறும் இரண்டாவதாய்க் கூறப்பட்ட "சொக்கொல்" விமானம் பிற்பகல் புறப்பட்டு அம்பாரைக்குச் சென்று, அங்கு அன்றிரவு தங்கும்.

வெள்ளிதோறும் இவ்விரு விமானங்களும் உள்நாட்டு விமானப் பாதையிலுள்ள எல்லாத் தானங்களுக்கும் போகும்.

ஒருவழிப் பிரயாணங்களின் செலவு விதம வருமாறு:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | — மின்னேரியா | ரூபா | 23 | சதம் | 20 |
| ,, | — திருக்கோணமலை | ,, | 20 | ,, | 40 |
| ,, | — அம்பாரை | ,, | 35 | — | — |
| ,, | — யாழ்ப்பாணம் | ,, | 55 | — | — |

இடைத்தானங்களுக்குப் பிரயாணச் செலவு வருமாறு:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருக்கோணமலை | — அம்பாரை | ரூபா | 25 | சதம் | — |
| யாழ்ப்பாணம் | — அம்பாரை | ,, | 46 | ,, | 40 |
| ,, | — மின்னேரியா | ,, | 31 | ,, | 20 |
| மின்னேரியா | — அம்பாரை | ,, | 16 | ,, | 75 |

20 இருத்தலுக் குட்பட்ட பொருள்களைச் செலவின்றிப் பிரயாணிகள் கொண்டு போகலாம்.

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 22)

### "பிறை யொன்றிரண்டு பொருநோ குடியிற் பிறந்தவரே"

பத்மநாதன்: ஏன், ராதா, இன்று இப்படியெல்லாம் என்னுளஞ்சுடச் சுடப் பேசுகின்றீர்? உம்மிடத்தில் எனக்கு உள்ளன்பில்லை யென்று நீர் சொல்வது என்னுளத்தைப் போழ்கின்றது; ஒருமுறை கடிதமெழுதத் தாமதித்தமையினால், உம்மிடத்திற்குவாராதவறியமையினால், என்னை உம்மிடத்தில் அன்பில்லாதவன் என்றுசொல்லலாமோ? நான் உமக்கு வேணுமென்று ஏதுந்தவறு செய்தறியேன், அறியாமையினால் ஏதுஞ் செய்திருந்தாற் பொறுத்துக் கொள்ளுதிர்; "பிழைபொறுத்திரண்டு பொருநோ குடியிற் பிறந்தவரே" என்றல்லவா புகழேந்தியாரும் பாடியுளார்; மேலும் நான் செய்த பிழையை நீர் பொறுக்காவிட்டால் வேறு யார் பொறுப்பது?

ராதா: (சிறிது நேரம் மௌனஞ் சாதித்து, அளவிற்கு விஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம் எனத் தன்னுள்ளத்திற் சிந்தித்துத் தனது மதிவதனத்திற் புன்னகையரும்ப விழிகளிற் கருணை பெருக அவனை ஆதரவுகூர நோக்கி) என்னன்பிற் குரியவரே, உங்களிடத்தில் நிசமாக கோபங் கொண்டால், எனக்கு வெறுப்புண்டானால் இப்பொழுது உங்கள் வாசஸ்தானந் தேடி இங்கு வருவேனோ? வரமாட்டேன்; நான் கேட்டுக்கொண்டபடி நீங்கள் என்னிடத்திற்கு வாராமையாலும், அதுஇயலாதாயின் அன்புடன் ஒரு கடிதம் எனக்கு வரைந்தனுப்பச் சிந்தியாமையினாலும் பெரிதுஞ் சஞ்சலமுற்றேன்; நீங்கள் இன்று வருவீர்கள், நாளை வருவீர்கள், உங்கள் கடிதம் இன்றுகிடைக்கும் நாளைகிடைக்கும் என்றெல்லாம் ஆவலுடன் பார்த்த கண்ணும் பூப்ப எதிர்நோக்கியவண்ணமிருந்தேன்; என்னை நீங்கள் அலட்சியஞ் செய்ய, வெறுக்க, புறக்கணிக்கக்காரணமில்லையே, அப்படியிருக்க இப்படியேன் மௌனஞ் சாதிக்கிறீர்களென்று எண்ணியெண்ணி மனம் புண்ணானேன், உங்கள்மேல் நான் வைத்த மெய்க்காதல் என்னுள்ளக் கட்டுப்பாட்டையுந் திண்மையையுஞ் சிதைத்துவிட்டமையினால், உங்களை உடனே தரிசிக்க வேண்டுமென ஆசைகொண்டு எனது நாணத்தையும் அச்சத்தையும் நழுவவிட்டு இங்குவந்து எனக்குரிய மடமென்னுங் குணத்தை மறந்து உங்களுடன்வார்த்தையாடத் துணிந்தேன்; நான் உங்கள்மீது கொண்ட உண்மைக் காதலையும் என் கற்புநெறியையும் இன்னமுஞ் சோதிப்பது முறையல்ல, என்துரையே!

### "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை"

இப்படிச்சொல்லி முடிக்கும்போது ராதா நாணத்தினாற் சாம்பினள்; கண்களில் நீர் ததும்பியது; அதரங்கள் துடித்தன; பூங்கொடியென ஒசிந்து தலை குனிந்தாள். ராதா இறுதியிற்பன்னிய இனிய சொற்கள் பத்மநாதனிடத்திருந்த கவலையை அதிகப்படுத்தி விட்டன; பழகிய நாள் தொடக்கம் இதுவரையில் ஒரு நாளும் "துரையே" என என்னை விளித்தறியாத ராதா, இன்று கூசாது நாவாரத் துரையேயென்று ஆதரம் பெருக விளிக்கின்றாளே; இது என்ன அடாத சோதனை; இப்படியான யௌவனத்தோடு கூடிய பெண்களுடன் ஊடாடுவது, பெரும் பிழையாகும், ஆபத்திற்கேதுவாகுமென்பதை இப்பொழுதுதான் நிசமென அறிந்தேன்! ராதா இன்று ஆமோ அல்லவோ என்பதை முற்றாகக்கிக்கொள்ள வேண்டுமெனச் சற்று முன்பு சொன்னதும், ஒரு பிரதானமான நோக்கங் கொண்டுதான் என்பது இன்றுதான் எனக்குப் புலப்படுகிறது; "நெஞ்சை யொளித்தொருவஞ்சகமில்லை" எனபர்; ஆனதால் நானும் உண்மையை இன்றைக்கே இக் கன்னிகைக்கு வெளியிட்டு வேறுதல் வேண்டும் என நிச்சயித்தான்.

### "குறையென்னுதி!"

அவன் ராதாவைக் கவலையும் ஆதரவும் பெருகப் பார்த்து "அறிவிற் சிறந்த அருமையான ராதா, நீரெனிலோ கலவியறிவொழுக்கம மனக்கட்டுப்பாடென்னு மிவற்றிற் சிறந்துள்ளீரென்பதை, சில நாட்களேனும் உம்முடன் பயின்று ஊடாடியமையினால் நன்கு அறிந்துள்ளேன்; என் உள்ளக்கிடக்கையையும் எனது நிலைமையையும் உமக்கு இன்றேனும் வெளியிடாது ஒளித்து வைத்திருப்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# மகளிர் மன்றம்

## அன்னையர் கடமை

ஒரு நாட்டின் சிறப்புக்கு ஆடவர் எங்ஙனம் காரணராயிருக்கின்றார்களோ அங்ஙனமே பெண்களும் காரணராகின்றார்கள். ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டு மக்களின் அறிவு, ஆற்றல், செல்வம் என்பவற்றைப் பொறுத்ததாகும். இம்மூன்றுக்குமுரிய தெய்வங்களாக முறையே கலைமகள், பாரசக்தி, திருமகள் என்பவர்கள் போற்றப்படுகின்றனர். குறித்த மூன்றிற்கும் மூன்று பெண் தெய்வங்களை வைத்திருந்து ஒரு நாட்டின் சிறப்பில் பெண்களின் கடமை எவ்வளவு தங்கியுள்ளதென்பது வெள்ளிடைமலை.

பெண்கள், சகோதரி, இல்லாள், மகள், அன்னை ஆகிய நான்கு நிலைகளிலும் சில கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாக விருக்கின்றார்கள். மங்கையரின் வாழ்க்கை நிலை காலநிலைக்கேற்ப மாறுபட்டாலும் அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகள், தொண்டுகள் பலவுண்டு. ஆனால் பெண்களின் — சிறப்பாக அன்னையாரின் கடமை நாட்டின் சுவதாகரீக வளர்ச்சியிலே தங்கியுள்ளதென்பதல்ல. அவர்கள் தம் சமூகத்தில் ஒற்றுமை, அன்பு முதலியவற்றை வளர்த்துத் தம் கடமைகளைத் தவறின்றிச் செய்வார்களேயானால் நாடும் வளர்ச்சியுறும், சமூகமும் முன்னேறும்.

உலகில் மக்களுக்குண்டாகும் பயன்களின் பல அன்னையராலேயே செய்யப்பட வேண்டும். அவர்களிடத்தே மக்களுக்கு வேண்டிய பயன்களை யருளும் சக்தி யுண்டு. எதிர்கால மக்களின் வாழ்க்கை அன்னையரிலேயே தங்கியுளது. அன்னையின் அன்பு அருட்சக்தியை யுண்டாக்குகிறது. "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று கூறுகிறார் மணிவாசகர். இதிலிருந்து "தயை" என்பது அன்னையரின் உத்தம குணங்களிலொன்று என்பது புலப்படுகின்றது.

அன்னையரின் கடமை பல மக்களைப்பெற்று வளர்த்து விடுவதில மாத்திரம் தங்கியுள்ளதல்ல. ஒவ்வோரன்னையும் ஒவ்வோர் மக்களையும் நாட்டின் நன்மக்களாக்க முயலுதல் வேண்டும். கல்விச் செல்வம், பொருட்செல்வம் என்பவற்றால் மாத்திரம் நன்மக்களாக்கி விட முடியாது. சமூகத்தில் ஒற்றுமை, சகல ஜீவபிராணிகளிலுமன்பு, இறைவன் வழிபாடு முதலியவற்றிலும் நன்மக்களாக்குதல் வேண்டும். அன்னையின் வட்டிற சோற்றிலும், தொட்டிற் பாட்டிலும், தூய அன்பும், வீரமும், தொண்டும் பிரதிபலிக்குமேயானால் சேயும் அவ்வண்ணமே வரும் என்பதில ஐயமில்லை; "தாய்போற் சேய்" என்பது முந்தையோர் வாக்கு. அன்னை தன் மக்களின் இதயத்தில், செயலில் அன்புச் சக்தியை யுண்டாக்கவேண்டுமாயின் தானும் அன்பு வழியில் செல்ல வேண்டும், ஒவ்வோரன்னையும் தம் மக்களை மாத்திரம் எமது மக்களென்னும் கொள்கையை அகற்ற வேண்டும். சன சமூகத்திலுள்ள ஒவ்வோர் குழந்தையும் ஓரிறைவனின் குழந்தைகளாதலால் தம் குழந்தைகளென்றே கருதுதல் வேண்டும். தம் சமூகத்திலுள்ள பச்சிளங் குழந்தைகள் பல வறுமைப் பிணியால் உண்ண உணவின்றி வாட்ட முறுவதைக் கண்டும், தங் குழந்தைகள் மாத்திரம் நோக் தவறுமல் விதம்விதமாக உண்டு வளர வேண்டுமென்ற எண்ணம் அன்னையின் உள்ளத்திலிருந்து ஒழிக்கப்படவேண்டும். அன்னையின் இச் செய்கை குழந்தைகளையும் மற்றையவர்களோடு பேதமின்றி அன்புடன் ஊடாடச் செய்யும்.

அன்னையானவள் குடும்பத்திலும், சமூகத்திலும் ஒற்றுமையுடையவளாயிருக்கவேண்டும். பொறாமை, கோபம், வீண் சண்டை, தலைவின்மை முதலிய துர்க்குணங்களின்றி ஊருடன் ஒத்து வாழவேண்டும். தன் சமூகத்திலுள்ள பெண்களுடன் ஒற்றுமை யுடையவளாயிருக்கவேண்டும். அன்னையர் எவ்விதம் ஒற்றுமையாய், அமைதியாய் அன்பின் பாதையில் நடந்து செல்கிறார்களோ அவ்விதமே குழந்தைகளும் தம் சகோதரருடனும், தம் சூழலிலுள்ள ஏனைய குழந்தைகளுடனும் ஒற்றுமையாய் வாழ்ந்து வருவர்,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஔவைப்பிராட்டியாரின் அரிய கூற்று. ஒரு சேய்க்கு முதற் தெய்வம் அன்னையே! பின் தகப்பன்; அன்னை இறைவனைப்பற்றிய உண்மையை உணர்த்த வேண்டும். சேய்க்குத் தாய் எங்ஙனம் உணர்த்த முடியும்? இறைவனைத் தான் வழிபடுதலைக் கண்டு நாளடைவிற் சேயும் வழிபடும் எனவே நினைந்து ஆலய வழிபாட்டில் அதி சிரத்தை பூணவேண்டும். இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றிய சிறு கதைகளைக்கூறி அவற்றின் மூலம் இறைவன் கருணையை உணர்த்துதல் வேண்டும். ஓய்வு நேரங்களில் வீண் வார்த்தைகள் பேசி தவப்பொழுதை அவப்பொழுதாக்காமல் இயன்றவரை ஒவ்வோரன்னையரும் தம் மனதை இறைவன் பாற் செலுத்தி இறைவனைப் பிரார்த்தனை செய்து வரவேண்டும், மக்களும் அன்னையரைப் பின்பற்றி அவ்வழியிற் சென்று இறைவனருளைப் பெறுவர்.

## விளம்பரம்

### ரேடியோ சிலோன் நிலைய வாத்யக் கோஷ்டி

ரேடியோ சிலோனில் அமைக்கப்பட விருக்கும் நிலைய வாத்யக் கோஷ்டியில் சேர்வதற்கு அனுபவம் வாய்ந்த இசைக் கலைஞர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வாத்யக்கோஷ்டித் தலைவர், வயலின், ஸிதார், தபேலா, சரோட், தில்ருபா, எஸ்ராஜ், கிளாரிநெட், வீணை, மிருதங்கம், கோட்டுவாத்யம், புல்லாங்குழல், ஜலதரங்கம், தம்புரா, மற்றும் - தபேலா தவிர்த்த - தாளவாத்யங்கள் வாசிக்க வல்லவர்கள்.

தராதரங்கள், உத்தியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும், ஒலிபரப்பு இலாகா தலைவர், ரேடியோ சிலோன், கொழும்பு 7, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1951-ம் வருடம் அக்டோபர் மாதம் 5-ந் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டும்.

-ஒப்பம்- பி. தோண்டன்.
ஒலிபரப்பு இலாகா அதிகாரிக்காக.

ஒலிபரப்பு இலாகா,
கொழும்பு.
14-9-51.

G 32 25, 28—9—51.

## கால நிலை

சென்ற சனிக்கிழமை (22-9-51) மத்தியானத்தின்மேல் இப் பகுதியிற் பெரு மழை பெய்தது; இம் மழை நெல் விலதத்தவர் விதைக்க விருந்தவர்களாகிய எல்லார்க்கும் பொன்மழை போலாயிற்று; இப்பொழுதும் இடையிடையே மழைக் கோலங் காணப்படுகிறது; மழை இன்னமும் வேணும்.

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பேனேயானும் பெருந் துரோகியாவேன்; நான் உம்மிடத்தில் வைத்த அன்பும் விசுவாசமும் அளவிலாகும்; நீரும் என்மீது அவ்வாறே வைத்துள்ளீரென எண்ணியிருக்கின்றேன்; மனத்திண்மை யில்லாமையால் ஒருபோது அவைகள் காதலாக மாற நேர்ந்தாலும், அங்ஙனம் நேராவொட்டாது தடுத்துக்கொள்ளுதிர். கல்வியாகிய கற்பு உமமிடத்தில் என்னைக் காட்டிலும் அதிகமிருக்கும்போது, நெறி யெனப்படும் கற்பு உமக்கு அரிதாகமாட்டாது; இப்பொழுது என்னுடன் வார்த்தையாடும்போது ஈற்றில் நீர் சொன்ன சில வார்த்தைகளும் என்னை விளித்த விதமும் எனக்குக் கவலையைத் தருகின்றன; உம்முடைய நோக்கத்தை நீர் சொல்லாமற் சொல்ல, நான் உணர்ந்து கொண்டேன்; ஆனால் உம்மை எனக்கு வாழ்க்கைத் துணைவியாகப் பெறுதற்கு நான் பூர்வ புண்ணியஞ் செய்திலேனென்றுதான் சொல்லக் கிடக்கிறது; நான் பிரமசாரியென வாழ்ந்தாலும் ஒரு கன்னிகைக்குக் கணவனாக என் பெற்றார் சுற்றத்தார் பெரியாரால் நியமிக்கப்பட்டுள்ளேன்; அக்கன்னிகையும் எனக்குப் புறத்தியாளல்லள்; என் சொந்த மைத்துனியாவள்; மேலும் அக்கன்னிகை எனக்கே யுரியவள் என்ற நியதி நேற்றின்று உண்டானதன்று; சிறு பிராயத்தொட்டுள்ளது; ஆதலால் நீர் கொண்டுள்ள அந்த ஒரு நோக்கத்திற்கும் நான் உடன்பட முடியாத நிலையிலிருக்கிறேன்: குறைவெண்ணுதீர்; ஆனால் உமக்கும் எனக்கு மிடையே யுள்ள தூய அன்பு விசுவாசமென்னு மிவைகளுக்கு ஒருபோதும் பங்கம் நேராதென்பதை நம்புதிர்" என்று மனமுருகச் சொல்லி முடித்தான்.

(வரும்)

## கணவனை வெட்டச் சோரனுக்குக் கத்தி கொடுத்த காரிகை

ஈ. விக்ரர் என்பவன் பொலிசாக் கடமை பார்த்து, பின்பு அதனை விடுத்து, வியாபாரஞ்செய்து பொருளீட்டி "முதலாளி" யானவன்; இந்த விக்டருக்குரிய கடை கொழும்பு நகரிலுள்ள பாஸலின் வீதியிலுள்ளது; இவன் மணிக்குட்டியென்பவனுடைய மனைவிமீது காதல் கொண்டு அவளைத் தன் சோரநாயகியாக்கினன்; விக்ரரும் அவனது சோரநாயகியும் குறித்த கடையின் உட்புறத்திற் சரச சல்லாபங்களில் இருக்கும்போது விக்ரருடைய பெண்டாட்டி நேரிற் கண்டு தன் கணவனைக் கடிந்தாள்; கணவன் அவளைத் தாத்திவிட்டுத் தன் சோரநாயகியுடன் வெளிப்படையாக விருந்தான்; ஒருநாள் அவளுடைய சொந்தப் புருஷனாகிய மணிக்குட்டி குறித்த சோரசிருவரையுந் தன் வீட்டில் நேரிற்கண்டு இருவரையுந் தாக்கியபோது அவனுடைய மனைவி ஒரு கத்தியை யெடுத்துத் தன் கணவனை வெட்டும்படி சோர நாயகன் கையிற் கொடுக்க, அவன் அதனை வாங்கி வெட்டும்படி ஓங்க மணிக்குட்டி தன்னை வெட்ட வொட்டாது தடுத்துக் கத்தியை விக்டரிடமிருந்து பறித்து அக்கத்தியினால் அவனையே வெட்டிவிட அவன் மரணமடைந்தான். மணிக்குட்டிக்கு மாறாகக் கொழும்பு உயர்தர நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்ட கொலை வழக்கில் மணிக்குட்டி நடந்த விஷயம் முழுவதையும் உள்ளபடி சொன்னபோது, ஜூரிமார் அவனை நிரபராதியென்று கூறியமையினால் நீதியரசர் விடுதலை செய்தார்.

## துர்க்கை அம்மன் கோவில் திருப்பணி

இலங்கையில் புராதனமானதும், ஓரே ஒரு ஆலயமுமாயுள்ள தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் மிகவும் பழுதடைந்து, இருப்பதால், அவசியம் திருத்திக் கட்டவேண்டும். மேற்படி கோவிற் பரிபாலனத்துக்கு டக்ரர். S. சுப்பிரமணியம் (Retired P.S. அக்கிராசனராயும், திரு. C. வன்னியசிங்கம் (M.P. அத்துவக்காத்து) தனாதிகாரியாயும், திரு. N. சங்கரப்பிள்ளை B A. உபதலைவராயும், திரு. V. சுப்பிரமணியம் (உபாத்தியாயர்) காரியதரிசியாயும் 11 பேர் கொண்ட சபையார் பொறுப்பேற்றிருக்கிறார்கள். கோவில் கட்டி முடிக்க ரூபா 4000/= மதிப்பு இருக்கிறது.

ஆலயத் தொண்டர்கள் ஏனையோர் பண உதவி செய்யுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

இங்ஙனம்
வ. சுப்பிரமணியம்
காரியதரிசி.

துர்க்கை அம்மன் கோவில்,
14-9-51.

M. 99 25, 28—9—51.

## கோணுசலத் திருவுருவங்கள்

திருத்திக்கொள்க:— வருகிற திங்கட்கிழமை (1-10-51) பகல் 3 மணிவரை மானிப்பாய்க்குப் புறப்பட்டு அங்குள்ள சில வீதிகளால் எழுந்தருளச் செய்து 5 மணிவரை மருதடிப் பிள்ளையார் கோயிலையடைந்து தங்கும்; இரவு பத்து மணிவரையில் தரிசனத்துக்கு வைக்கப்படும்.

## ரேடியோ

* இசைத்தட்டு

திருச்சி புதன் செப்டெம்பர் 26

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே ஏ ராதாகிருஷ்ண பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 கதம்பம்* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 மதுரை மணி ஐயர்* 2 தமிழில் செய்தி 2 10 வேதாரண்யம் எஸ் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 2 45 முடிவு.

மாலை 5 30 கோட்டுவாத்யம் ஆ இரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 மாகாண முன்னேற்றம்: எம் ஆர் பெருமாள் —பேச்சு 8 கருமணி நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கே ஏ ராதா கிருஷ்ணபிள்ளை பாட்டு 10 முடிவு.

திருச்சி வியாழன் செப் 27

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 திருவையாறு டி வைத்தியநாதையர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 காலை இசை* 8 30 முடிவு.

1 சித்ரகானம்* 1 15 பெண்ணுலகம் 1 30 ரவீந்த்ர சங்கீத்* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 கே சுப்ரமணியம் வீணை* 2 தமிழில் செய்தி 2 10 ஜயா சுப்ரமணியம் வீணை 2 45 முடிவு.

மாலை 5 30 காமகோடிபாய் ஜலதரங்கம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நாட்டுப் பாடல்கள் 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 கிராமகானம்* 8 புத்தக விமர்சனம் ஜோஸப் சின்னப்பா 8 15 பல்லடம் சஞ்சீவி ராவ் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருவையாறு டி வைத்தியநாதய்யர் பாட்டு 10 முடிவு.

திருச்சி வெள்ளி செப் 28

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 சுவாமிமலை எஸ் கல்யாண சுந்தர தேசிகர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 கதம்பம்* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 எச் ராமச்சந்திர சாஸ்திரி புல்லாங்குழல் 2 தமிழில் செய்தி 2 10 எஸ் மீனாக்ஷி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 திருவாரூர் எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 5 45 இசைப் பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சத்திரிகையின் கதை தொடர் நாவல் 7 45 இலக்கிய வாசகம் ஆர் ராமமூர்த்தி ஐயர் 8 சுவாமிமலை எஸ் கல்யாணசுந்தர தேசிகர் பாட்டு 8 30 வாத்ய இசை* 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருவாரூர் எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 10 முடிவு.

## தற்கொலைக்குக் காரணம் தாங்கொணு வறுமை

"பாணந்துறையில் 32 வயதுப் பிராயமுடையவளும் மூன்று குழந்தைகளின் தாயுமாகிய R. காரலின் கோனு என்பவள் தானகத் தன் னுயிரை மாய்த்தாள்; பிரேத சோதனைப்போது அவளுடைய கணவனை அவள் தற்கொலை செய்தமைக்குக் காரணமென்னவென விசாரணை செய்தபோது அவன் பின்வருமாறு கூறினன்:—"ஐந்து ஆண்டுகளாக எனக்கு எவ்வகையான பிழைப்பும் இல்லாமற் போய்விட்டது; இதனல் என் மனைவி மக்களைத் தாபரிக்க முடியாது காணும்இடைஞ்சற்பட்டுச் சிலவேளைகளிற் பட்டினி கிடக்க நேர்ந்தது; பெற்றவள் தன்குழந்தைகள் பசியினுற் படும் பாட்டைக் கண்டு சகிக்க முடியாமல் தன் னுயிரை மாய்த்திருக்க வேண்டும்".


## அறிவித்தல்

மயிலிட்டிப் பகுதிப் பிறப்பு இறப்புக்கும் வலிகாமம் வடக்குக்கிழக்குப் பகுதிப் பொதுக் கல்யாணத்திற்குமாய் பதிவுகாரர் பதவிக்கு விண்ணப்பங்கள் 1-11-51 திகதிக்குப் பிந்தாமல் கிடைத்தால் கீழ் ஒப்பமிட்டிருப்பவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. விண்ணப்ப காரர்கள் விவாகஞ் செய்தவர்களாகவும் ஏற்கனவே அரசாங்க சேவையி லில்லாதவர்களாகவும், 25 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 45 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், இருக்க வேண்டும்.

3. மேலதிகமான விபரங்களும் விண்ணப்பப் பத்திரங்களும் கீழ் ஒப்பமிட்டிருப்பவரின் காரியாலயத்தி லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

M. RAMALINGAM,
வடமாகாணப் பதிவுகாரருக்காக,
யாழ்ப்பாணம்
8 - 9 - 51.
G 31 25—9—51.


## ஆரியதிராவிட பாஷாபி விர்த்திச் சங்கம் பாலபண்டித பரீட்சை 1952—54

க. பாடவகை I : இலக்கியம் i.

1. பத்துப்பாட்டு. பட்டினப்பாலை (நச்சினார்க்கினியர் உரையும், மறைமலையடிகள் ஆராய்ச்சி யுரையும்)
2. திருக்குறள் அறத்துப்பால் (பரிமேலழக ருரையுடன்)
3. மணிமேகலை 1—10 காதைகள்
4. திணைமாலை நூற்றைம்பது
5. உயிரிளங்குமரன் நாடகம் (சோமசுந்தரப் புலவர்)

இலக்கியம் ii

1. கம்பர் கவிதைக்கோவை முதற்பாகம் (A.S. சுந்தரராஜ ஐயங்கார்)
2. தஞ்சைவாணன் கோவை உரையுடன் (சைவ பரிபாலன சபைப் பதிப்பு)
3. கலிங்கத்துப்பரணி
4. பெரியபுராண வசனம் (ஆறுமுக நாவலர்)
5. வெள்ளிவிழா மலர் (யா. ஆ. தி. பா. சங்கம்)

உ. பாடவகை II : இலக்கணம் i.

1. நன்னூல் விருத்தியுரை (நாவலர் பதிப்பு)
2. யாப்பருங்கலக்காரிகை (சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் பதிப்பு)

இலக்கணம் ii

1. தண்டியலங்காரம்
2. அகப்பொருள் } (சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் பதிப்பு)
3. புறப்பொருள் வெண்பாமாலை (Dr. உ. வே. சாமிநாதையர் பதிப்பு)

ங. பாடவகை III : இலக்கிய வரலாறு

1. தமிழிலக்கிய வரலாறு (கா. சுப்பிரமணியபிள்ளை)
2. சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும் (Dr. உ. வே. சாமிநாதையர்)
3. பதினாறும் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்
4. பதினேழாம் நூற்றாண்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் } (சோமசுந்தர தேசிகர்)

ச. பாடவகை IV : பின்வரும் ஏழு (அ—எ) பகுதியுள் ஏதாவதொன்றைத் தெரிவு செய்யலாம்:

(அ) சம்ஸ்கிருதம்:
1. சம்ஸ்கிருத திருதீயா தர்சம்
2. சந்திராபீட சரிதம் }
S. Subramania Vadhyar, Book Seller, Kalpathi, Palghat

(ஆ) ஆங்கிலம் : இவ்வினுப்பத்திரம் ஆங்கில S. S. C. பரீட்சைக்குரிய ஆங்கில பாஷைப் (English Language) பாடத் திட்டத்திற் கூறிய விஷயங்களைத் தழுவியதாயிருக்கும்.

(இ) சிங்களம் : இவ் வினுப்பத்திரம் சிங்கள S. S. C. பரீட்சைக்குரிய சிங்கள பாஷைப் பாடத்திட்டத்திற் கூறிய விஷயங்களைத் தழுவியதா யிருக்கும்.

(ஈ) சரித்திரம் :
1. திராவிட மக்கள் வரலாறு (E. L. தம்பிமுத்து)
2. யாழ்ப்பாண வைபவமாலை (முதலியார் குல. சபாநாதன்)
3. பாண்டியர் வரலாறு (T. V. சதாசிவபண்டாரத்தார்)
4. சோழர் (மா. இராசமாணிக்கம்பிள்ளை)

(உ) தருக்கம்:
1. சைவப்பிரகாசனம் முதலிலிருந்து பிரமாணவியல் முடிய.
2. தருக்க சங்கிரகம் மூலம் மட்டும்.

(ஊ) செய்யுளியற்றல் : வெண்பா, ஆசிரியப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை.

(எ) சமயம் : i. சைவசமயம்
1. திருவாசகம்—திருச்சதகம் உரையுடன்
2. சிவப்பிரகாசம் உரையுடன்
3. பெரியபுராணம் ஆறுமுக நாவலர் சூசனம்.

அல்லது ii. கிறீஸ்த சமயம்
(a) கத்தோலிக்க கிறீஸ்த சமயம்* அல்லது
(b) ஏனைய கிறிஸ்த சமயம்*

அல்லது iii இஸ்லாம் சமயம்*

* இவற்றிற்குரிய விரிவான திட்டம் விரைவில வெளியிடப்படும்.


L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= o =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னதிட்டி,
யாழ்ப்பாணம்.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

பல திணிசுகளிலும் வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரேட்
யாழ்ப்பாணம்
Std 2

சாலாமிஸ்ரி லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் தீரும். தேகபுஷ்டி, வஜீசரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
கால்றுத்தல் விலைரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

டொட்டணம் 1-க்கு விலை சதம் 25

எமது சோல் ஏசன்றுகள்

1 மோகன் அன் கொம்பனி
No. 66 முதலாம் குறுக்குத்தெரு
கொழும்பு

2 நவலெட்சுமி புத்தகசாலை
செட்டியார் தெரு
கொழும்பு

K. ஆறுமுகம்பிள்ளை
எமதுவிலாசம் நி 1/3 தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு
M 92


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna, on Tuesday September 25, 1951